அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 01/2013

எனது இல: PSC/EST/1/7/1/2011

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்

இல 177, நாவல வீதி

நாராஹேன்பிட்ட

கொழும்பு 05.

2013 டிசம்பர் 18 ஆம் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>ஆட்சேர்ப்புத் திட்டங்களில் மற்றும் சேவை பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஷேட செயலாற்றுகையின் மீது பதவி உயர்வு வழங்கும் ஏற்பாடுகள் பற்றி தீர்மானித்தல்</u>**

இல அப/12/1542/504/142 மற்றும் 2012.11.14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய மேற்படி விடயம் குறித்து தேசிய சம்பளப் பதவியணி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக, அமைச்சரவை கொள்கைத் தீர்மானமொன்றை எடுக்கும் வரையில் பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென 2013.10.03 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(I) தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் சேவை பிரமாணக் குறிப்புக்களிலும் விஷேட செயலாற்றுகையின் மீது பதவி உயர்வு வழங்குவதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தல் வேண்டும்;

(II) அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் சேவை பிரமாணக் குறிப்புக்களிலும் விஷேட செயலாற்றுகையின் மீது பதவி உயர்வு வழங்கும் ஏற்பாடுகளை உள்ளடக்காமலிருத்தல் வேண்டும்.

02. அதற்கிணங்க, தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் சேவை பிரமாணக் குறிப்புக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள விஷேட செயலாற்றுகையின் மீது பதவி உயர்வு வழங்குவதற்கான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும், இதன் பின்னர் ஆட்சேர்ப்புத் திட்டங்களின், சேவை பிரமாணக் குறிப்புக்களின் வரைபுகளை அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற போது விஷேட செயலாற்றுகையின் மீது பதவி உயர்வு வழங்கும் ஏற்பாடுகளை அவற்றில் உள்ளடக்காமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ஒப்பம் / ரி.எம்.எல்.சி.சேனாரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு

பிரதிகள்: பிரதம அமைச்சரின் செயலாளர்

அமைச்சரவை செயலாளர்

தாபனப் பணிப்பாளர் நாயகம்

செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு